

பாடம் 1

ஜூன் 29-ஜூலை 5

# தேவன் சிருஷ்டித்தார்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *ஆதி 1-3; அப் 17:28; சங் 148; சங் 24:1; ஆதி 4:1-9; மத் 22:37-39; வெளி 14:7.*

**மனன வசனம்:** தரித்திரனை ஒடுக்குகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான்; தரித்திரனுக்குத் தயைசெய்கிறவனோ அவரைக் கனம்பண்ணுகிறான். நீதி 14:31.

ஏதாவது ஒரு பொருளைச்செய்து அல்லது உணவைச் சமைத்து ஒருவருக்குக் கொடுக்கிறீர்கள்; அவர் அதை உடைத்தால் அல்லது அலட்சியம்செய்தால் எப்படி இருக்கும்? தேவன் இந்த உலகத்தைப் படைத்து மனிதரிடம் கொடுத்தார்; பாவத்தால் அவர்கள் அதைச் சீரழித்துவிட்டார்கள்; அவருக்கு எப்படி இருக்கும்?

மிகக்கவனமாக தேவன் உலகத்தைச் சிருஷ்டித்தார், அது 'மிகவும் நன்றாயிருந்தது' என்று வேதாகமம் சொல்கிறது. தேவன் தம் சிருஷ்டிப்புபற்றி எவ்வளவு பெருமிதமடைந்தார் என்பதை சிருஷ்டிப்பு சம்பவத்தில் காணலாம். ஆதி 1,2. இதன் அடிப்படையில் விழுகைபற்றி ஆதி 3இல் வாசியுங்கள். மனிதர்செய்த காரியத்தால் தேவன் எவ்வளவுக்கு மனமுடைந்திருப்பார்!

ஆயிரக்கணக்கான வருடங்கள் இந்த உலகத்தில் பாவம், வன்முறை, அநியாயம், கலகம் போன்றவை காணப்பட்டாலும் தேவன் தொடர்ந்து உலகத்தை நேசித்துவருகிறார். உலகத்தை மீட்கவும், மறுசீரமைக்கவும் தேவன் திட்டமிட்டு, செயல்பட்டுவருகிறார். அவருடைய மகத்தான திட்டத்தில் நமக்கும் பங்குகொடுத்திருக்கிறார். நாம் அவருடைய கிருபையைப் பெற்றவர்கள். எனவே தேவனோடு சேர்ந்து பணிசெய்கிற பொறுப்பும் நமக்கு உள்ளது. எவ்வளவு பரிசுத்தமான, மேன்மையான பொறுப்பு அது!

*2019, ஜூலை 6 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தேவனைப் புரிந்தால், சிருஷ்டிப்புபற்றி புரிவது

இவ்வுலகமும் அதன் சகல ஜீவராசிகளும், நம் வாழ்க்கையும் அதின் சகல பிரயாசங்களும், நம்மைச் சுற்றியுள்ளோரின் வாழ்வும் அவர்களோடு நாம் இடைபடுகிற விதமும், நம் வாழ்க்கையைச் சிறப்பாக வாழ்வதும் எல்லாமே தேவனைச் சார்ந்துதான் உள்ளன. 'அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்.' அப் 17:28.

அப்படித்தான் வேதாகமம் ஆரம்பிக்கிறது: 'ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.' ஆதி 1:1. அவர் சொல்ல, எல்லாம் சிருஷ்டிக்கப்பட்டன. நம் கற்பனைக்கும் எட்டாத ஆற்றலும் செயல்பாடும் அவருடைய வார்த்தையில் வெளிப்பட்டன.

தூரத்தில் இருந்துகொண்டு தேவன் இவற்றைச் செய்யவில்லை. மிகநெருக்கமாக இடைபட்டார்; முதல் மனிதனை அவர் சிருஷ்டித்தபோது, அதை நாம் காணமுடிகிறது. ஆதி 2:7.

**கேள்வி: முதல் மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட சம்பவத்தை வாசியுங்கள். ஆதி 1:26-31. தேவனைப்பற்றி இந்தச் சம்பவம் சொல்லும் முக்கியச் செய்திகள் என்ன? மனிதர்களைப்பற்றிச் சொல்லும் முக்கியச் செய்திகள் என்ன?**

'இயற்கையில் நேரம் செலவிடுவதாலும், அவருடைய சிருஷ்டிப்பைக் கூர்ந்துநோக்குவதாலும், அதில் படிந்துள்ள சிருஷ்டிகரின் குணத்தைக் காண்பதாலும் தேவனைப் பற்றி அதிகமாக அறிந்துகொள்ளலாம்' என்று சொல்வார்கள். ஆனால், தேவனை அறிந்துகொள்ளும்போது, இந்த உலகத்தை எப்படிப்பட்டதாக அவர் சிருஷ்டித்திருக்கவேண்டும் என்பது புரியும். அதாவது, அவர் ஒழுங்கின் தேவன் என்பது சிருஷ்டிப்பின் ஒழுங்கில் தெரியும். அவர் ஆக்கப்பூர்வமான தேவன் என்பது, அவர் சிருஷ்டித்திருக்கும் உலகின் ஆக்கப்பூர்வமான விஷயங்களில் தெரியும்.

அதேபோல, தேவன் உறவுகளின் தேவன். எனவே, தேவன் சிருஷ்டித்திருக்கிற இந்த உலகில், உறவுகள் ஓர் அடிப்படைக் கூறாக இருப்பதைக் காணமுடியும். ஒவ்வொரு விஷயத்தையும் சிருஷ்டிப்பின் பிற விஷயங்களோடு உறவுள்ளதாகச் சிருஷ்டித்தார். உறவில் இணக்கமுள்ளவைகளாக மிருகங்களைச் சிருஷ்டித்தார். மனிதர்களை தம்மோடும் பிற மனிதர்களோடும் பிற சிருஷ்டிகளோடும் உறவுள்ளவர்களாகச் சிருஷ்டித்தார்.

தேவனைப்பற்றி நமக்குத் தெரிந்துள்ளது மிகவும் குறைவு. ஆனால் அவருடைய குணம்பற்றி நமக்குத் தெரிந்திருக்கிற விஷயங்களின் அடிப்படையில் பார்த்தால், இந்த உலகம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்பினாரென்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

இந்த உலகத்தில் பாவத்தின் பாதிப்புகள் கண்கூடாகத் தெரிகின்றன; ஆனாலும், இயற்கையானது தேவனுடைய குணத்தின் பிரதிபலிப்பு என்பதைப் புரிந்துகொள்வதற்கு இயற்கையை ஆராய்வது எவ்வாறு உதவுகிறது?

# பூரண உலகம்

ஏதேனை நினைத்ததும் ஏக்கம் வரலாம். ஆதாம்-ஏவாளின் வீடாக தேவன் உண்டாக்கின ஏதேன் தோட்டம்பற்றி வேதாகமம் சற்று விவரிக்கிறது; அதுவே நம் இருதயங்களில் ஓர் ஏக்கத்தை உண்டாக்கி விடுகிறது. அங்குள்ள வாழ்க்கை எப்படி இருந்திருக்குமெனத் தெரிய வில்லை; ஆனால், அதை அனுபவிக்கும் ஆசை நமக்கு வருகிறது.

தேவனும்கூட மனநிறைவோடு, திருப்தியோடு காணப்பட்டதாகத் தெரிகிறது. 'தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது.' ஆதி 1:31. அழகு இருந்தது, பயனும் இருந்தது. உருவத்திலும் பயனிலும் அதன் அமைப்பு பிரமிப்பூட்டியது. எங்கும் பசுமை, உயிரோட்டம். வாழ்க்கையைச் செழிப்பாக்கத் தேவை யான சகலமும் அங்கிருந்தன. தாம் சிருஷ்டித்த உலகம் நன்றாயிருந்தது என்று தேவன் பிரமித்துப்பேசினதில் ஆச்சரியமில்லை.

**கேள்வி: ஆதியாகமம் 1ஐ வாசியுங்கள். 'நல்லது என்று தேவன் கண்டார்' என்று மீண்டும் மீண்டும் சொல்லப்படுவதிலுள்ள முக்கியத்துவம் என்ன? ஆதி 1:4,10,12,15,25,31.**

---

விழுகைக்குப்பிறகு எழுதப்பட்டது வேதாகமம்; ஆனால், இயற் கையைக் கொண்டாடும் பகுதிகள் அதிகம் உள்ளன. யோபு 38-41; சங் 148. முதலில் சிருஷ்டிக்கப்பட்ட உலகம் எப்படியிருந்தது? பாவத்திற்குப் பிறகு என்னவாயிற்று? இவற்றை ஒப்பிடுவதற்காக யோபு 38-41உம் சங் 148உம் எழுதப்படவில்லை; அவை நிகழ்காலத்தில் உள்ளன; இன் றும் உலகில் காணப்படுகிற நல்ல விஷயங்களைப் பேசுகின்றன.

இயேசுவும்கூட தேவனுடைய நற்குணத்திற்கும் அக்கறைக்கும் இயற்கையிலிருந்து முன்னுதாரணங்களைக் காட்டினார். மத் 6:26,28-30. நாம் தேவனைச் சார்ந்திருப்பதையும், நம்மைச்சுற்றிலும் நமக்கு நன்மையானதை அவர் வைத்திருப்பதையும் அவற்றின்மூலம் கற்றுக் கொடுத்தார். சிருஷ்டிப்பின் அதிசயங்களைக் கூர்ந்துகவனித்தால், நம் சிருஷ்டிகரிடமிருந்து நாம் பெற்றுவரும் ஆச்சரியமான ஈவுகளைக் காணலாம். நமக்குச் சோதனைகள் இருந்தாலும், அந்த ஈவுகளைத் தருபவருக்கு நாம் நன்றியும் தோத்திரமும் அர்ப்பணிப்பும் உடையவர் களாகக் காணப்படவேண்டும்.

செவந்த்-டே அட்வென்டிஸ்டுகள் சிருஷ்டிப்பின் அருமை தெரிந் தவர்கள்; தேவனுடைய ராஜ்யம் வரக்காத்திருப்பவர்கள். எனவே இந்த உலகத்தில் கண்டு, அனுபவிக்கிற அழகுகளும் சந்தோஷங்களும் நன்மைகளும் இந்த உலகம் முன்பு எப்படி இருந்தது என்பதையும், இனி எப்படி இருக்கும் என்பதையும் உணரச்செய்யவேண்டும்.

சிருஷ்டிப்பின் அற்புதங்களில் என்னென்ன விஷயங்களைக் கண்டு பூரிக்கிறீர்கள்? அனுதின வாழ்வில், இயற்கையில் நீங்கள் காண்கிற அதிசயங்கள் எவ்வாறு ஆண்டவரை நீங்கள் அதிகமாக அறிந்துகொள்ள உதவவேண்டும்?

# பூமியின் உக்கிராணக்காரர்

ஏதேன் தோட்டமும், பூமியில் புதிதாகச் சிருஷ்டிக்கப்பட்டிருந்த பகுதிகளும் பரிபூரணமாக விளங்கின; வாழ்க்கையைச் செழிப்பாக்கச் சிருஷ்டிக்கப்பட்டிருந்தன; குறிப்பாக மனிதர்களின் மகிழ்ச்சிக்காகப் படைக்கப்பட்டிருந்தன.

முதல் மனிதனுக்கும் மனுஷிக்கும், அவர்களுக்குப் பின் வரவிருந்தவர்களுக்கும் சிருஷ்டிப்பில் பங்காற்றுகிற வாய்ப்பை தேவன் கொடுத்திருந்தார். புதிய உலகில் ஆதாமும் ஏவாளும் ஒரு சிறப்பு அந்தஸ்தைப் பெறவிருந்தார்கள்.

மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் பெயர்வைப்பது முதல் பணியாக ஆதாமுக்குக் கொடுக்கப்பட்டது. ஆதி 2:19. அடுத்ததொரு பணியை ஆசீர்வாதமாக தேவன் அவர்களுக்குக் கொடுத்தார்: 'தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.' ஆதி 1:28.

**கேள்வி: ஆதி 1:28ஐயும் ஆதி 2:15ஐயும் ஒப்பிடுங்கள். மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட பணி விபரத்தை ஓரிரு வரிகளில் விளக்குங்கள்.**

படைப்பை முற்றிலும் அழிக்குமளவிற்கு அதை ஆக்கிரமிப்பதற்கான ஓர் உரிமமாக ஆதி 1:28ஐ கிறிஸ்தவ உலகம் பார்த்திருக்கிறது. மனிதனின் மகிழ்ச்சிக்காகவும், பயனுக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டதுதான் உலகம். ஆனால் 'அதைப் பண்படுத்தி, காக்க' வேண்டுமென்று ஆதி 2:15 கூறுகிறது.

உக்கிராணத்துவம் என்றதும் பணவிஷயம்தான் நினைவுக்கு வரும். ஆனால் தேவன் சிருஷ்டித்து, நம்மிடம் கொடுத்த பூமியைப் பாதுகாப்பது வேதாகமம் கொடுக்கிற முதல் உக்கிராணத்துவப்பணி. பூமியில் வாழவிருந்த ஆதாமின் பிள்ளைகளையும், பின் சந்ததியினரையும் மனதில் வைத்துத்தான் ஆதாம்-ஏவாளிடம் அந்தக் கட்டளை கொடுக்கப்பட்டது. சிருஷ்டிக்கப்பட்ட உலகமானது எல்லா மனிதருக்கும் வாழ்க்கையின், நன்மையின், அழகின் ஆதாரமாக இருக்கவேண்டும், அதைப் பாதுகாப்பதில் ஆதாமும் ஏவாளும் பெரும் பங்காற்றவேண்டும் என்பதே அதுகுறித்த ஆதிநோக்கமாகும்.

இன்றும் இந்தப் பூமி கர்த்தருடையதுதான். சங் 24:1. தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற அனைத்திற்கும் நாம் உக்கிராணக்காரர்களாக அழைக்கப்பட்டிருக்கிறோம். விழுந்துபோன உலகில் உக்கிராணப் பொறுப்பு மேலும் அதிகரித்திருக்கிறது.

விழுந்துபோன உலகில் உக்கிராணக்காரர்களாக இருப்பது என்றால் என்ன? இந்தப் பொறுப்பை உணர்வது அனுதின வாழ்க்கையில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்?

# உடைந்த உலகம்

பூமியில் வேறு எதற்கும் கொடுக்காத ஒழுக்கச்சுதந்தரத்தை ஆதாம்-ஏவாளுக்கு தேவன் கொடுத்திருந்தார். செடிகளும் மிருகங்களும் மரங்களும் அப்படி அல்ல. மனிதர்கள் ஒழுக்க முள்ளவர்களாக வாழவேண்டியிருந்தது. இந்த ஒழுக்கச்சுதந்தரத்திற்கு தேவன் அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தார்; அதனால் அவர்கள் கீழ்ப்படியாமல் இருக்கத் தெரிந்துகொள்ளும் சாத்தியத்தையும் கொடுத்திருந்தார். அன்பு, தெரிந்துகொள்ளும் உரிமை அடிப்படையில் மனிதர்களுடன் தமக்கு உறவு இருக்கவேண்டும் என்று விரும்பினார். அதனால், சிருஷ்டிகள் அனைத்தும் ஓர் இடர்நிலையில் வைக்கப்பட்டார்கள்.

அழிக்கிறவன் ஒருவன் இருந்தான் (தூதர்களுக்கும் இந்த ஒழுக்கச் சுதந்தரம் இருந்தது.) தேவனுடைய சிருஷ்டிப்பின் பூரணத்தையும் நன்மையையும் கெடுக்க விரும்பினான்; தேவன் விசேஷமாகச் சிருஷ்டித்திருந்த மனிதர்களை வைத்து, இதைச் சாதிக்க நினைத்தான். தேவன் கொடுத்திருந்தவற்றில் பூரணமும் நிறைவும் இல்லாததுபோல சர்ப்பத்தின்மூலம் கேள்வி எழுப்பினான். ஆதி 3:1-5. தேவன் கொடுத்திருந்தவற்றைவிட அதிகமாக இச்சிக்கவைத்தான். தேவனுடைய நற்குணத்தில் சந்தேம் எழுப்பினான், அவர்கள் தங்களையே சார்ந்திருக்கத் தூண்டினான்; இதுதான் அவன் வைத்த முதல் சோதனை.

ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு விரோதமாகத் தீர்மானித்தார்கள்; சிருஷ்டிப்பின்போது தேவன் திட்டமிட்டிருந்த உறவு கெட்டுப்போனது. அத்தகைய உறவுநிலையை அதன்பிறகு ஆதாம்-ஏவாள் அனுபவிக்க முடியவில்லை. ஆதி 3:8-10. நிர்வாணிகளானார்கள், அவமான உணர்வு வந்தது. அவர்களுக்கிடையே இருந்த உறவு சீரமைக்க முடியாத அளவுக்கு மாறியது. பிற சிருஷ்டிகளோடு இருந்த உறவும் பாதிக்கப்பட்டது.

**கேள்வி: மனிதர்மத்தியிலும், இயற்கை உலகிலும் உறவுகளில் மாற்றம் ஏற்பட்டதுபற்றி ஆதி 3:16-19 வசனங்கள் என்ன சொல்லுகின்றன?**

பாவத்தால் ஆதாம், ஏவாள், பிறசிருஷ்டிகளின் வாழ்வு சிக்கலானது. பாவத்தின் விளைவுகள் நிஜமானவை. மனிதர்களையும், உறவுகளையும் அவை பாதிக்கின்றன. நம் சிருஷ்டிகரைவிட்டு நம்மை அவை பிரித்துவிட்டன. நம் குடும்பங்களையும் பலவிதங்களில் பாதித்துவிட்டன. மற்றவர்களோடான உறவும் பாதிக்கப்பட்டுவிட்டது. சுற்றுச்சூழலும் நமக்குச் சாதகமாக இல்லை. நம் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் பாவத்தின் நாசம் வெளிப்படுகிறது.

ஆனால் தேவன் சிருஷ்டித்தபோது உலகம் இப்படி இல்லை. ஆதி 3இல் 'சாபங்கள்' சொல்லப்பட்டாலும், பாவம் பாதித்த உறவுகளைச் சீர்ப்படுத்தி, இந்த உலகத்தை மறுசீரமைக்க தேவன் ஒரு வழியை உண்டு பண்ணியது குறித்த வாக்குறுதியும் கொடுக்கப்படுகிறது.

பாவத்தின் பாதிப்புகள் காணப்படலாம்; ஆனால், ஆதியில் இந்த உலகத்தில் இருந்த நன்மைகளை வெளிப்படுத்தி, தேவதிட்டத்திற்கு இசைந்து வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

# மனிதரின் குடும்பவலை

பாவம் நுழைந்தபிறகு, உலகத்தின் வீழ்ச்சிக்கு அதிக நாட்கள் தேவைப்படவில்லை. பொறாமையும் தப்பெண்ணமும் கோபமும் தலைதூக்கின; இவை முதல்சகோதரர்களுக்குள் கொலையைத் தூண்டின. காயீனின் பாவம்பற்றி காயீனிடம் தேவன் கேள்வி கேட்டதும் 'என் சகோதரனுக்கு நான் காவலாளியோ?' என்று அவன் முரணான, எதிர்கேள்வி கேட்கிறான். தேவனிடம் காயீன் கேட்ட கேள்விக்குப் பதில், 'ஆம், நீ உன் சகோதரனுக்கு காவலாளிதான்' என்பதுதான்.

**கேள்வி: நீதி 22:2 சொல்லும் செய்தி என்ன? பிற மனிதர்களுடன் நமக்குள் உறவு பற்றி இந்த வசனம் வலியுறுத்துவது என்ன?**

ஒவ்வொரு மனிதனையும் சிருஷ்டித்தவர் தேவன். அவர்கள் அவருடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். தேவ சிருஷ்டிப்பில் இன்று கீறலும் உடைசலும் காணப்பட்டாலும், உறவுகளின் கட்டமைப்பில் அவர்கள் எல்லாரும் உண்டு. 'மனிதஇனத்தின் கட்டமைப்பில் நாம் எல்லாரும் பின்னிப்பிணையப்பட்டிருக்கிறோம். இந்த மாபெரும் சகோதர அமைப்பில் ஒருவருக்குத்தீங்கு நேர்ந்தால்கூட அது அனைருக்கும் பாதிப்புதான்.' – *EGW, MH, p 345.* பொதுவான இந்தப் பிணைப்புதான் தேவனுக்கும் சக மனிதர்களுக்கும் நம்மைப் பொறுப்பாளிகள் ஆக்கியுள்ளது. மத் 22:37–39.

தேவன் நம் சிருஷ்டிகரென வேதாகமம் மீண்டும்மீண்டும் வலியுறுத்துகிறது. ஓய்வுநாளைக் கைக்கொள்வதற்கும் (யாத் 20:11), கடைசி நாளில் நாம் தேவனைத் தொழுதுகொள்வதற்கும் (வெளி 14:7) அது ஒரு முக்கியக் காரணமாக இருக்கிறது. அவர் சிருஷ்டிகர் என்பதுதான் பிறர்மேல் அக்கறைகாட்டுவதற்கும், தரித்திரருக்கு இரங்குவதற்கும் முக்கிய ஊக்கச்சக்தியாக இருக்கிறது.

தேவன் நம் சிருஷ்டிகர் என்பதுதான் நமக்குள்ளான பொதுவான இணைப்பு. 'தரித்திரனை ஒடுக்குகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான்; தரித்திரனுக்குத் தயைசெய்கிறவனோ அவரைக் கனம் பண்ணுகிறான்.' நீதி 14:31. இதைவிட இந்தப் பிணைப்புபற்றி தெளிவாகச் சொல்லமுடியுமா?

தேவன் நம் சிருஷ்டிகர். நாம் நம் வாழ்க்கையை முற்றிலுமாக அவரிடம் அர்ப்பணிக்கவும், அவரைத் தொழவும், மற்றவர்கள்மேல் அக்கறைகாட்டவும் அவர்அழைக்கிறார். சிலசமயங்களில் இது எரிச்சலூட்டலாம், சங்கடமாக இருக்கலாம், அசௌகரியமாக இருக்கலாம். ஆனாலும், நாம் நம்முடைய 'சகோதரர்களுக்குக் காவலாளிகள்தாம்.'

**தேவன் சிருஷ்டிகர் என்றுவேதாகமம்மீண்டும்மீண்டும்வலியுறுத்துவதுஏன்? மற்றவர்களை நாம் நடத்துகிற விதத்தில் இது எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்கவேண்டும்?**

## வெள்ளி ஜூலை 5

## மேலும் படிக்க:

“‘தேவன் அன்பாகவே இருக்கிறார்.’ அன்பே அவர் இயல்பு; அவர் பிரமாணமும் அன்பே. முன்புஎப்போதும் அப்படித்தான் இருந்தது; இனிமேலும் அப்படியே இருக்கும். ‘நித்திய நடைகளைக் கொண்ட நித்தியவாசியும் மகத்துவமும் உன்னதமுமானவர் மாறாதவர். அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.’

சிருஷ்டிப்பு வல்லமையின் ஒவ்வொரு வெளிப்பாடும் நித்திய அன்பின் ஒரு விளக்கமே. சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொன்றிற்கும் தேவனுடைய ஆட்சியில் முழுமையான ஆசீர்வாதங்கள் உள்ளன.’ *— EGW, PP, p 33.*

“தங்களுடைய எஜமானின் உடைமைகளுக்கு உண்மையுள்ள உக்கிராணக் காரர்களாக மனிதர்கள் இருந்தால், அப்பத்திற்காகக் கெஞ்சுகிறவர்களும், வறுமையில் தவிக்கிறவர்களும், வஸ்திரமில்லாதவர்களும், வறியவர்களும் ஒருவர்கூட இருக்கமாட்டார்கள். இன்று மனிதஇனம் மூழ்கியுள்ள உபத்திரவநிலைக்கு மனிதரின் உண்மையற்ற தன்மையே காரணம். மனிதர்களை தம் உக்கிராணக்காரர் களாக தேவன் சிருஷ்டித்திருக்கிறார். பாடுகளும் உபத்திரவமும் நிர்வாணமும் தரித்திரமும் அவனுக்கு ஏற்படவேண்டிய அவசியமில்லை. எல்லாருக்கும் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் அவர் செய்திருக்கிறார்.” – *EGW, Welfare Ministry, p 16.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *மேலுள்ள மேற்கோளில் கடைசியாக எலன் ஒய்ட் சொல்வது என்ன? தரித்திரத்திற்குக் காரணர் யாராம்? நாம் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக இருக்கவேண்டியது ஏன் முக்கியமானது?*

2 *பாவப்பாதிப்பு உண்டாகி ஆயிரக்கணக்கான வருடங்கள் கடந்தாலும், சிருஷ்டிப்பில் நன்மையை எவ்வாறு இன்றும் காணமுடிகிறது? தேவன் சிருஷ்டிகரென நாம் நம்புகிறோம்; அவருடைய சிருஷ்டிப்பின் நன்மையை மற்றவர்கள் காண நாம் என்ன செய்யலாம்?*

3 *உக்கிராணத்துவம் என்றால் என்ன? உக்கிராணத்துவம்பற்றி அதிகமாகப் புரிந்துகொள்ள இந்தவாரப் பாடத்தில் உங்களுக்கு உதவியது எது?*

4 *நாம் ஒருவரைச் சந்தித்ததும், அவர் ‘தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டு, அவரால் அன்புகூரப்படுகிறவர்’ என்கிற எண்ணம் ஏற்பட்டால், அவரோடு உள்ளஉறவிலும், அவரை நாம் நடத்துகிறவிதத்திலும் அது எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்கும்?*

**பாடச்சுருக்கம்:** **தேவன் நல்லதொரு, பூரணமான உலகத்தைச் சிருஷ்டித்தார்; தம் சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர்களிடம், அதைப் பண்படுத்தி, காக்கச் சொன்னார். தேவன் ஆதியில் திட்டமிட்டிருந்த உறவுகளைப் பாவம் சீரழித்தது. இருந்தாலும், சிருஷ்டிப்பின் நன்மையைப் பாதுகாக்கும் உக்கிராணக்காரர்கள் நாம்; நம் சகமனிதர்கள்மேல் அக்கறைகாட்டவேண்டியவர்கள் நாம். இந்தக் கடமையை நிறைவேற்றுவதும் தேவனை நம் சிருஷ்டிகராகக் கனப்படுத்துவதற்கான ஒரு வழியாகும்.**